## பாதிக்கப்பட்டோர் உதவிக்கான சட்ட விதிமுறைகள் (OHG)

இந்தத் தகவல்கொத்து தற்பொழுது கூடி வாழ்கின்ற கணவரால் அல்லது சேர்ந்து வாழ்கின்ற காதலன் /காதலியால் முன்னாள் கணவரால் / கூடி வாழ்ந்தவரால் உடல் ரீதியாக/அல்லது உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குகின்றது.

### பொதுவான விதிகள்

- பாதிக்கப்பட்ட பெண்ணாகிய நீங்கள், உங்களுக்குரிய மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆலோசனை நிறுவனத்தை சுயமாகத் தேர்ந்தெடுத்து அவர்களின் உதவியைப்பெற முடியும். இவ்வாலோசனை நிறுவனங்களிலிருந்து சட்டரீதியான, சமூகரீதியான மற்றும் உளரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை இருக்கின்றது.
- இவ்வாலோசனை நிறுவனங்களின் சேவைகள் யாவும் இலவசமானவை. இதில் ஆலோசனைவழங்குபவர்கள் இரகசியத்தைப் பாதுகாப்பார்கள். பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளுக்கும் குற்றப்பத்திரிகைக்கும் (Strafanzeige) எந்தவிதமான தொடர்புகளும் இல்லை
- பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவித்தொகை கிடைப்பதைப் பொறுத்து வேறு **உதவிநிலையங்களுக்கும் அதன்மூலமாகப் பணஉதவி** செய்யமுடியும். (உதாரணமாக சிகிச்சைகள், அவசியத்தங்குமிடங்கள் போன்றன.)
- குறிப்பிட்ட சில வதிமுறைகளின் கீழ் பாதிக்கப்பட்டதினத்திலிருந்து 5 வருடங்களுக்குள் **பண நஷ்டஈடு** கோரியும் ( உதாரணமாக வேலையிழப்பு )**மானநஷ்டம் கோரியும்** விண்ணப்பிக்க முடியும். இது 01.01.2007 இற்குப்பின்பு குற்றம் புரிந்த கிரிமினல் குற்றவாளிகளுக்கே செல்லுபடியாகும்.

**உங்களைத் துன்புறுத்தியவருக்கெதிரான வழக்குத் தாக்கலின் போது தங்களுக்குள்ள உரிமைகள்:**

- போலீஸ் அல்லது நீதிபதி விசாரணையின்போது நீங்கள் உங்களுடன் ஓர் நம்பிக்கைக்குரிய நபரை அழைத்துச் செல்ல முடியும்.
- குற்றவாளியின் முன்னிலையில் இல்லாமல் பிரத்தியேகமாக உங்களுக்குரிய விசாரணையை நடாத்தும்படி நீங்கள் கூறமுடியும்.
- விசாரணையின்போது ஆக தனிப்பட்ட உடல் சம்பந்தமான கேள்விகள் கேட்கப்பட்டால் அதற்குரிய பதிலை நீங்கள் சொல்லாமல் இருக்கலாம்.
- நீதிபதியின் முக்கியமான விசாரணை முடிவுகள் பற்றி அறிந்து கொள்ளமுடியும். உதாரணமாக குற்றவாளி ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டாரா, தொடர்பினைத் தடுத்தல் சம்பந்தமாக மறுவிசாரணை போன்ற விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

**நீங்கள் பாலியல் ரீதியான தாக்கத்திற்குள்ளாகியிருந்தால் மேலதிகமாக கீழ்வரும் உரிமைகள் உங்களுக்கு உள்ளன.**

- உங்களைப் பெண்போலீஸ் அதிகாரியும் பெண்அரசாங்க வக்கீலும்தான் விசாரிக்கவேண்டும் என்றும் பெண் மொழிபெயர்ப்பாளர்தான் வரவேண்டும் என்றும் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- நீதிமன்றத்தில் நீங்கள் பங்குகொள்ளவிருக்கும் விசாரணையின்போது குற்றவாளி கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- நீதிமன்ற விசாரணை சம்பந்தமான விடயங்கள் ஏனையோருக்குத் (பொதுமக்களுக்கு) தெரியாமலிருக்கும்படி இரகசியமான முறையில் நடாத்தும்படியும் கேட்கமுடியும்.

BIF Beratungsstelle für Frauen
gegen Gewalt in Ehe und Partnerschaft

Tel. 044 278 99 99
bif-frauenberatung.ch